DINAMALAR 22 FEB 09



# ஈஷா 'சிவராத்திரி' திருச்சியில் காண சிறப்பு ஏற்பாடு

**திருச்சி, பிப். 22-**

சத்குரு ஜக்கிவாசுதேவின் ஈஷா யோகா மையத்தில் நாளை நடக்கவுள்ள சிவராத்திரிவிழாக் கொண்டாட்டங்களை திருச்சியில் காண சிறப்பு ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது. இது பற்றி ஈஷா யோகா மையம் திருச்சி பகுதி ஒருங்கிணைப்பாளர் லட்சுமணன் கூறியதாவது:

ஜாதி, மதங்களைக் கடந்து தியானப் பயிற்சியை அறிவியல் ரீதியாக மேற்கொண்டு அனைவரும் வாழ்வில் நற்பலன்களை அடையலாம் என்று வலியுறுத்தி உலகிற்கு எடுத்துக்கூறி வருபவர் சத்குரு ஜக்கிவாசுதேவ். சர்வதேச அளவில் இவரது தியானம் மற்றும் யோகப்பயிற்சி முறைகளை கோடிக்கணக்கான மக்கள் கற்று பயன்பெற்று வருகின்றனர். கோவையை அடுத்த வெள்ளியங்கிரியில் இவரது தலைமையிடம் உள்ளது. இங்கு தியானம் பயில்வதற்கு ஏற்றசூழலில், மனதை ஒருநிலைப்படுத்தும் வகையில் ஒரு தியான லிங்கம் நிறுவப்பட்டு மக்களின் வழிபாட்டில் உள்ளது.

வெள்ளியங்கிரியில் ஒவ்வொரு ஆண்டும் மகாசிவராத்திரி விழா சிறப்பு முக்கியத்துவத்துடன் கொண்டாடப்படுகிறது. இந்த ஆண்டு அன்று மாலை தொடங்கி மறுநாள் காலை வரை தொடர்ந்து ஆன்மிக சொற்பொழிவுகள், குருஜியின் அருளாசி, கூட்டு வழிபாடு, தியானப்பயிற்சி, சிறப்பு கலை நிகழ்ச்சிகள் ஆகியவை 'ஆனந்த அலை' எனும் பெயரில் நடக்கவுள்ளன.

வெள்ளியங்கிரியில் நடக்கும் இந்த நிகழ்ச்சிகளை நேரில் காண பெருமளவிலான பக்தர்கள் வருவார்கள் என்றாலும், தொலைதூரங்களில் உள்ளவர்களும் இந்த கொண்டாட்டங்களை கண்டு பரவசமடைய கடந்த நான்கு ஆண்டுகளாக தனி ஏற்பாடுகள் செய்யப்பட்டு மக்கள் பார்த்து வருகின்றனர். இவ்வகையில் இந்த ஆண்டு வெள்ளியங்கிரியில் ஈஷா யோகா மையம் நடத்தும் மகாசிவராத்திரி விழா கொண்டாட்டங்களை தமிழகத்தில் 70 முக்கிய ஊர்களில் தனியார் தொலைக்காட்சி நேரடி ஒளிபரப்பு மூலம் காண ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.

இவ்வகையில் திருச்சி சிந்தாமணி, தேசியக்கல்லூரி மேல்நிலைப்பள்ளி மைதானத்தில் நாளை (23ம் தேதி) மாலை 6 மணி தொடங்கி மறுநாள் காலை 6 மணிவரை வெள்ளியங்கிரியில் நடக்கும்சிவராத்திரிகொண்டாட்ட நிகழ்ச்சிகளை பிரமாண்ட திரைகளில் காண ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதற்கென சிந்தாமணி மைதானத்தில் சுமார் 20 ஆயிரம் பேர்அமரும்வகையில்பிரமாண்ட பந்தல் அமைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில் பங்குபெறுவோருக்கெனசிறப்புஅன்னதானத்திற்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதேபோல் பெல் கைலாசபுரத்திலும் சிவராத்திரி விழாவை காண ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு அவர்கூறினார்.